(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 99.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2023 டிசம்பர் 12, செவ்வாய்க்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

439/2023

கௌரவ புத்திக பத்திரண,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இறக்குமதி செய்யப்படும் மதுபான பொதிகளில் ஒட்டப்படும் பாதுகாப்பு ஸ்டிக்கரை அச்சிடுவதற்கான கேள்விப்பத்திரத்திற்காக விலைமனுக்களைச் சமர்ப்பித்த கம்பனிகள்/நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கம்பனியும்/நிறுவனமும் சமர்ப்பித்த கேட்பு விலைகள் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்ட மெட்ராஸ் செக்கியுரிட்டி பிரின்டர்ஸ் நிறுவனம் சமர்ப்பித்த விலைமனுவின் பிரதியைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) மேற்படி நிறுவனத்திற்கு கேள்விப்பத்திரத்தை அளிப்பதற்கு அங்கீகாரமளித்த நபர்கள் யாவரென்பதையும்;

(v) பிற நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் மேற்படி நிறுவனம் கொண்டிருந்த தகைமைகள் யாவை என்பதையும்;

(vi) இந்நிறுவனம் தெரிவு செய்யப்பட்டமைக்கான அறிக்கையை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) விலைமனுவைச் சமர்ப்பிக்கும் போது மேற்படி நிறுவனத்திற்கு ISO 9001/14298/27001 சான்றிதழ் மற்றும் IHMA உறுப்புரிமை கிடைத்திருந்தமைக்கான ஆவணங்கள் இருந்தனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவற்றின் பிரதிகளைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்வந்த நிறுவனங்கள், சர்வதேச கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்ட நிறுவனங்கள் அல்ல என்பதை உறுதிபடுத்திக்கொள்வதற்கான முறையியலொன்று காணப்பட்டதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி முறையியல் யாதென்பதையும்;

(v) மேற்படி நிறுவனத்தின் உள்நாட்டுப் பிரதிநிதி யாரென்பதையும்;

(vi) ஸ்டிக்கர் மற்றும் பாதுகாப்பு டிஜிட்டல் குறியீடுகளை வழங்குவதற்காக மேற்படி நிறுவனம் கையொப்பமிட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின் பிரதியொன்றைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

694/2023

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு, மட் / பட் / குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயம் தற்போது பிரதான வீதியில் அமைக்கப்பட்டிருப்பதோடு, அந்தப் பாடசாலை முன்னர் அமைந்திருந்த இடத்தில் காணப்பட்ட விளையாட்டு மைதானத்தின் ஒரு பகுதி இன்றளவில் இலங்கை இராணுவத்தின் பொறுப்பில் உள்ளது என்பதையும்;

(ii) அதனால், விளையாடுவதற்காக அந்த மைதானத்தைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இலங்கை இராணுவத்திடமிருந்து மேற்படி விளையாட்டு மைதானத்தை விடுவிக்க எடுக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) கிழக்கு மாகாணத்தில், இராணுவத்தின் பொறுப்பில் மேலும் விளையாட்டு மைதானங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அவற்றின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iv) இலங்கை இராணுவத்திடமிருந்து அத்தகைய விளையாட்டு மைதானங்களையும் விடுவிக்க எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

823/2023

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை முதற்தடவையாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் கடன் பெற்றுக்கொண்ட ஆண்டு மற்றும் கடன் தொகை யாதென்பதையும்;

(ii) இன்றளவில் பெற்றுக்கொண்டுள்ள கடன் தொகை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களுக்கு அமைவாக ஐக்கிய அமெரிக்க டொலர் மற்றும் இலங்கை ரூபாவில் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி கடன்களை வழங்கியுள்ள நிறுவனங்கள்/ நாடுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கைக்கு எரிபொருள், எரிவாயு, பால் மா, உணவு மற்றும் மருந்து இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் செலவிட வேண்டி ஏற்படுகின்ற தொகை ஐக்கிய அமெரிக்க டொலர்களில் தனித்தனியே யாதென்பதையும்;

(ii) 2019 ஆம் ஆண்டு முதல் 2022 வரை அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை ஒவ்வொரு வருட அடிப்படையில் ஐக்கிய அமெரிக்க டொலர்களில் தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

842/2023

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி தொலவத்த,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டுப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு விளையாட்டுப் பாடசாலையிலும் தற்போது கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி மாணவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளும் ஏனைய வசதிகளும் யாவையென்பதையும்;

(iv) விளையாட்டுப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

856/2023

கௌரவ காமினி வலேபொட,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலிஸ் உத்தியோகத்தர்களின் மொழிப் பயன்பாட்டில் காணப்படும் மட்டுப்பாடுகளின் காரணமாக அவர்களிடமிருந்து சேவையைப் பெற்றுக்கொள்ளும் சில இனக் குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதை அறிவாரா என்பதையும்;

(ii) தற்போது இலங்கை பொலிஸ் சேவையில் உள்ள தமிழ் மொழியில் கடமையாற்றக்கூடிய பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை போதுமானதாக உள்ளதா என்பதையும்;

(iv) இல்லையெனில், தமிழ் மொழியில் கடமையாற்றக்கூடிய பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— இலங்கையில் சிறுவர்களின் போசாக்கின்மை அதிகரித்து வருகின்றதா என்பது தொடர்பில் ஆராய்வதற்கும், அவ்வாறாயின் அது சம்பந்தமாக மேற்கொள்ள வேண்டிய குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்கும், அடையாளங் காணப்பட்ட நடவடிக்கைகளை துரிதமாக செயற்படுத்துவது தொடர்பில் மேற்பார்வை செய்வதற்குமான பாராளுமன்ற விசேட குழு,— இலங்கையில் சிறுவர்களின் போசாக்கின்மை அதிகரித்து வருகின்றதா என்பது தொடர்பில் ஆராய்வதற்கும், அவ்வாறாயின் அது சம்பந்தமாக மேற்கொள்ள வேண்டிய குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்கும், அடையாளங் காணப்பட்ட நடவடிக்கைகளை துரிதமாக செயற்படுத்துவது தொடர்பில் மேற்பார்வை செய்வதற்குமான பாராளுமன்ற விசேட குழு, தன்னால் அவதானிக்கப்பட்ட விடயங்களை 2023 ஒக்டோபர் 05 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு மேலும் காலம் தேவைப்படுவதால் குறிப்பிட்ட விசேட குழுவிற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள கால எல்லை, பாராளுமன்ற நிலையியற்கட்டளை 102 இன் பிரகாரம் 2024 மார்ச் 05 ஆம் திகதி வரை கால நீடிப்பு செய்யபடுமாக.

2.

கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"பிரக்ஞாபந்து புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*அ1.

ஒதுக்கீடு சட்டமூலம் — (ஒதுக்கப்பட்ட இருபத்தைந்தாவது நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, டிசம்பர் 11)

*2.

முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர்,— கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2019),— 1981 ஆம் ஆண்டின் 75 ஆம் இலக்க, கரும்பு ஆராய்ச்சி நிறுவனச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் 2023.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்டக் கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.06.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.05 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*3.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— (அத்தியாயம் 235) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வை வரி தொடர்பில் 2023.11.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2023 ஆகஸ்ட் 29 ஆம் திகதிய 2347/06 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய 2343/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.11.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய 2345/64 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.11.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் பதில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 ஆகஸ்ட் 21 ஆம் திகதிய 2346/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.11.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 செப்டெம்பர் 08 ஆம் திகதிய 2348/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.11.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 5),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 ஒக்டோபர் 14 ஆம் திகதிய 2353/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.11.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2023 நவம்பர் 08) [1].

*10.

பிரிவிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

தேசிய நீரளவை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

மத்தியஸ்தத்திலிருந்து விளைகின்ற சர்வதேச தீர்த்துவைத்தல் உடன்படிக்கைகளை ஏற்றங்கீகரித்தலும் மற்றும் வலுவுறுத்தலும் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

மத்தியஸ்த சபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (188 ஆம் அத்தியாயமான) 1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47(1) ஆம் பிரிவின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2023 மே 25 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— (276 ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்டு, 2023 மே 15 ஆம் திகதிய 2332/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.07.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*20.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தலைவர், அங்கத்தவர்கள் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் ஊதியத்தினை தீர்மானித்தல்,— 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நியமிக்கப்பட்ட இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தலைவர், அங்கத்தவர்கள் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் ஊதியமானது, அச் சட்டத்தின் 9 ஆம் மற்றும் 24 ஆம் பிரிவுகளுக்கு அமைய பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட வேண்டியதுடன் அது திரண்ட நிதியத்தினால் செலுத்தப்படுதலும் வேண்டுமென்பதாலும்;

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அங்கத்தவர்களாக மூன்று பேர் நியமிக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு நியமிக்கப்படும் நபர்கள் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் அங்கத்தவராக பதவி வகிப்பதற்கு முன்னர் அவர்களினால் ஊதியம் பெறும் அனைத்துப் பதவிகளையும் கைவிட வேண்டியதுடன், ஆணைக்குழுவின் அங்கத்தவராக இருக்கும் வேளையில் ஏதேனும் வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபடுதல், ஏதேனும் தொழில் துறையில் ஈடுபடுதல் கூடாது என்பதாலும்;

சட்டத்தின் 19 ஆம் பிரிவின் பிரகாரம் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்படுபவர் அரச சேவையின் அனுவதித்தல் அடிப்படையில் நியமிக்கப்பட்டவர் அல்லாது இருப்பின் அவர் பணிப்பாளர் நாயகப் பதவியினை பொறுப்பேற்பதற்கு முன்னர் அனைத்து ஊதியம் பெறும் பதவிகளில் இருந்தும் விலக வேண்டுமென்பதாலும்;

இச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் விரிவடைவதனால் அவ் ஆணைக்குழுவின் தலைவர், அங்கத்தவர்கள் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் பொறுப்புக்களும் அதிகரித்துள்ளன என்பதாலும்; அத்துடன்

அப் பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர் மேற்கூறப்பட்டவாறு வேறு ஊதியம் பெறும் பதவிகளில் இருந்து விலகுதல் மற்றும் வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபடுதல் அல்லது ஏதேனும் தொழில் துறையில் ஈடுபடுதல் கூடாது என்பதனால் மற்றும் அவர்களினால் மேற்கொள்ளவுள்ள விசேட பணிகளை கருத்திற் கொண்டு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தலைவர், அங்கத்தவர்கள் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு, கீழே குறிப்பிடப்பட்டவாறு ஊதியம் செலுத்துவதற்கு අමප/23/2004/601/056 ஆம் இலக்க மற்றும் 2023 ஒக்டோபர் 23 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது:—

(i) தலைவருக்கு ரூபா. 500,000.00 உம், அங்கத்தவருக்கு ரூபா. 450,000.00 உம் மற்றும் பணிப்பாளர் நாயகத்திற்கு ரூபா 400,000.00 என்ற அடிப்படையில் மாதாந்த ஊதியத்தினை செலுத்துதல்;

அரச ஊழியர் ஒருவர் அனுவதித்தல் அடிப்படையில் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்படும் பட்சத்தில், ரூபா 400,000.00 ஊதியம் அல்லது அவ்வாறு நியமிக்கப்படுபவர் அரச ஊழியராக இறுதியாகப் பெற்று வந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் (போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் சாதன கொடுப்பனவு தவிர) கூட்டுத் தொகைக்கு சமமான அடிப்படையில் ஊதியம் அல்லது இவை இரண்டில் பெறுமதி கூடிய ஊதியத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு உரிமை கிடைக்கின்றது.

(ii) தொடர்பாடல் சாதனக் கொடுப்பனவாக தலைவருக்கு ரூபா. 10,000.00 நிதியும், அங்கத்தவருக்கு ரூபா. 7,500.00 வீதம் மற்றும் பணிப்பாளர் நாயத்திற்கு ரூபா. 7,500.00 வீதம் செலுத்துதல்.

(iii) போக்குவரத்துக் கொடுப்பனவு கீழ் குறிப்பிடப்பட்டவாறு செலுத்துதல்.

| | **எரிபொருள் கொடுப்பனவு** | **போக்குவரத்து கொடுப்பனவு **** | **சாரதிக் கொடுப்பனவு **** |
|---|---|---|---|
| தலைவர் | 225 லீற்றர் | ரூபா. 50,000.00 | ரூபா. 25,000.00 |
| அங்கத்தவர்கள் | 200 லீற்றர் | ரூபா. 50,000.00 | ரூபா. 25,000.00 |
| பணிப்பாளர் நாயகம் | 200 லீற்றர் | ரூபா. 50,000.00 | ரூபா. 25,000.00 |

****** அரசாங்கத்தினால் சாரதியுடன் உத்தியோகபூர்வ வாகனத்தினை வழங்க முடியாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் போக்குவரத்து கொடுப்பனவு மற்றும் சாரதிக் கொடுப்பனவினை பெற்றுக் கொள்ள உரிமை கிடைக்கின்றது.

இதற்கமைய, 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 9 ஆம் மற்றும் 24 ஆம் பிரிவுகளின் பிரகாரம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் தலைவர், அங்கத்தவர்கள் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு மேற்குறிப்பிடப்பட்டவாறு ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

*21.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 52 (5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஒக்டோபர் 25 ஆம் திகதிய 2355/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.12.02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1), 6 மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஒக்டோபர் 09 ஆம் திகதிய 2353/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 24 ஆம் திகதிய 2324/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

25.

இதயத்துடன் இதய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

26.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

இலங்கை பட்டயக் கப்பல்தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

தெதிகம ஸ்ரீ மைத்திரீ பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவ (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.

சத்திய ஸ்ரீ கணபதி பக்தி ஜன சேவா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.

இலங்கை சித்த உளவியல்சார் உயர் கற்கைநெறி திறந்த நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

"ஒதுக்கீடு" எனும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் "தினப்பணிக்கான அனுபந்தம்" எனும் தனியிதழிற் பார்க்க.

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---